தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 24, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூன் 7, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“அருவினை என்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.”

ஒரு தொழிலைச் செய்து முடிப்பதற்கேற்ற கருவிகளோடு, காலத்தையும் அறிந்து செயல்பட்டால், வெற்றி பெறுவதற்கு முடியாத கடினமான செயல் என்று எதுவும் இல்லை.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

141—

தடுப்பணை

***12638—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, அகசிப்பள்ளி ஊராட்சியில் உள்ள மேலேரிக்கொட்டாய் அருகில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. டி. செங்குட்டுவன் அவர்கள் கிருஷ்ணகிரி தொகுதி, அகசிப்பள்ளி ஊராட்சியில் உள்ள மேலேரிக்கொட்டாய் அருகில் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி தொகுதி, அகசிப்பள்ளி ஊராட்சியில் உள்ள மேலேரிக்கொட்டாய் அருகில், வனத் துறைக்குச் சொந்தமான காப்பு நிலமோ, காப்புக் காடோ ஏதுமில்லை. வனத் துறைமூலம் மேற்குறிப்பிடப்பட்ட மேலேரிக்கொட்டாய் அருகில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலத்தில் 1979 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 210.5 ஹெக்டர் பரப்பளவில் பல்வகை மரங்கள் அடங்கிய தோட்டங்கள் எழுப்பப்பட்டு, வனத் துறையினால் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்நிலம் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால், தடுப்பணை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது ஏதுமில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகவை 95-ல் கால் பதித்திருக்கும், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு தளபதியார் அவர்களையும் வணங்குகிறேன்.

கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி, அகசிப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட மேலேரிக்கொட்டாய், பள்ளிகொடுத்தான்கொட்டாய், நாசின்கொட்டாய், கோவில்கொட்டாய், தண்ணீர்பள்ளம், பாப்பனேரிக்கொட்டாய், குண்டுத்தண்ணீர்பள்ளம், கூசிக்கொட்டாய், கனகமுட்லு, மங்கம்மாபுரம், மகசிபள்ளி ஆகிய கிராமங்கள் வனத்

2018 ஜூன் 7]

துறையை ஒட்டியுள்ள மலையடிவாரக் கிராமங்களாகும். மழைக் காலங்களில் மலையிலிருந்து வரும் தண்ணீர் முழுவதும் தேங்கி நிற்பதற்கு வழி இல்லாமல் வீணாகப் போய்விடுகிறது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய நிலத்தடி நீரைப் பொறுத்தவரையில், 500 முதல் 700 அடி வரை ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து எடுக்கப்படும் நீரில்கூட அளவுக்கு அதிகமாக ஃப்ளோரைடு கலந்து, பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. வேறு வழியில்லாமல் அந்த நீரைக் குடிப்பதால், அப்பகுதி மக்கள் மூட்டு வலி, பல்லில் கறை, கை, கால் வீக்கம், கர்ப்பிணிப் பெண்களுக்குப் பிரச்சினை என பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு, பல பேர் இறந்தும் போயிருக்கிறார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், பொது மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடைய கோரிக்கையை ஏற்று, கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்தில் தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்படி, பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவக் கல்லூரியின் மருத்துவர் குழு மற்றும், சென்னையிலிருந்து ஒரு மருத்துவர் குழு, ஆக இரண்டு மருத்துவர் குழுக்களை அனுப்பி, ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலுள்ள நிலத்தடி நீர் குடிநீருக்குத் தகுதியில்லாத நீர் எனக் கண்டறிந்து, மேற்படி நிலத்தடி நீரை ஆழ்துளைக் கிணறுகள் மூலமாக எடுத்து பொது மக்கள் யாரும் அருந்தக் கூடாது என்று 'டாம், டாம்' போடப்பட்டு, ஆழ்துளைக் கிணறுகள் இருக்கக்கூடிய எல்லா இடங்களிலும் போர்டுகள் வைத்து, எச்சரிக்கை செய்யப்பட்டது. அதன் பிறகுதான், தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவுப்படி மாண்புமிகு எங்கள் செயல் தலைவர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்குட்டுவன், நீங்கள் ஒரு கேள்வி கேட்பதற்கே இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டீர்கள் என்றால் எப்படி? துணைக் கேள்வி கேட்க வாய்ப்பு கொடுக்கவில்லை என்று எல்லோரும் வருத்தப்படுகிறார்கள். முதல் கேள்வி கேட்பதற்கே நீங்கள் இவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டு பேசினீர்கள் என்றால், அதற்கு மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி, இன்னொரு கேள்வியை நீங்கள் கேட்டு, அதற்கு அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், நான் எல்லோருக்கும் எப்படி வாய்ப்புக் கொடுக்க முடியும்? திரு. சுரேஷ் ராஜன் உங்கள் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கிறார். அவர் நேற்று என்னிடம் வந்து துணைக் கேள்வி கேட்க வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று மிகவும் வருத்தப்பட்டார்.

திரு. டி. செங்குட்டுவன்: *இந்த அணையின் அவசியத்தைப் பற்றி நான் இந்த அவையில் சொல்ல வேண்டுமா, வேண்டாமா? அதற்காகத்தான் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கான காரண, காரியங்கள் எல்லாம் நிறைய இருக்கும்.*

திரு. டி. செங்குட்டுவன்: *இந்த நேரத்தில் பேசவிட்டிருந்தால்கூட, நான் பேசி முடித்திருப்பேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூல வினாவிற்குத் தொடர்பான இரண்டு துணைக் கேள்விகளைக் கேட்டீர்களென்றால், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். வாய்ப்புக் கேட்கிற அடுத்தவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பேன். துணைக் கேள்விகளுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை, வாய்ப்புக் கொடுக்கவில்லை என்று எல்லோரும் என்னிடம் கோபித்துக்கொண்டால், நான் என்ன செய்வது? இனிமேல் நான் என்ன செய்யப் போகிறேன் என்றால், துணைக் கேள்வி யாருக்கும் இல்லை; மூலக் கேள்வி கேட்டவர்களுக்கு straight ஆக வாய்ப்புக் கொடுத்துவிட்டு, நான் கேள்வி நேரத்தை முடித்துவிடப் போகிறேன். (குறுக்கீடு) அது என்னுடைய விருப்பம்தான். நீங்கள் ஒத்துழைக்கவில்லை என்றால் நான் அப்படித்தான் செய்ய வேண்டும். வேறு வழியில்லை. சரி கேளுங்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவுப்படி, மாண்புமிகு செயல் தலைவர் அவர்களின் பெருமுயற்சியால் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1978 கோடி ரூபாய்க்குக் கொண்டுவரப்பட்டது. அந்த ஒகேனக்கல் தண்ணீரும் இன்றுவரை அந்தப் பகுதிக்குப் போய்ச் சேரவில்லை. ஆகவே, ஏற்கெனவே வனத் துறைக்குச் சொந்தமான ஆஞ்சநேயர்மலை, புளியமரத்துக்குளியிலே சுமார் 2 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டிருந்த தடுப்பணையும் தற்போது அறவே பயன்படுத்த முடியாத அளவிற்குப் போய்விட்டது. ஆகவே, பாழடைந்து போயுள்ள தடுப்பணைக்குப் பதிலாக அதே இடத்தில் புதிய தடுப்பணையைக் கட்டி நீர் ஆதாரத்தை உருவாக்கிட இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

2018 ஜூன் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் வனத்துறைக்குச் சொந்தமான பகுதியில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா என்றுதான் மூலக் கேள்வி கேட்டிருக்கிறார். ஆனால், பாண்டிச்சேரியில் உள்ள ஜிப்மர் மருத்துவமனைக்குப் போய், பிறகு ஒகேனக்கல் போய், பிறகு எங்கெங்கேயோ போய் வந்திருக்கிறார். மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வி. அதேநேரத்தில் அவர் கேட்டிருக்கிற பகுதி வனத் துறைக்குச் சம்பந்தம் கிடையாது. அது வருவாய்த் துறை நிலமாக இருப்பதால், நான் முதலில் சொன்ன பதில் அங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அவர் குறிப்பிட்டிருக்கிற தடுப்பணை விஷயங்களில் அவருடைய தொகுதி கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், வேப்பனஹள்ளி, சூளகிரி மற்றும் பர்கூர் ஆகிய வட்டாரங்களிலுள்ள காப்புக் காடுகளில் தென்பெண்ணை ஆற்றின் நீர்ப் பிடிப்புப் பகுதிகள்—*watershed *2014-2015 ஆம் ஆண்டில் நபார்டு திட்டத்தின்கீழ் 102 இலட்சம் ரூபாய் செலவில் 17 கசிவுநீர்க் குட்டைகளும்; 102 இலட்சம் ரூபாய் செலவில் 34 தடுப்பணைகளும் மற்றும் 302 இலட்சம் ரூபாய் செலவில் 85,000 நீர்த்தேக்கப் பள்ளங்களும்* (trenches) *அமைக்கப்பட்டுள்ளன. எனவே, தேவையான இடத்தில் தண்ணீரைத் தேக்கி, நிலத்தடி நீர் உயருகின்ற சூழ்நிலையை அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு தகவலுக்காகச் சொல்கிறேன். முழுக்க முழுக்க வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடத்தில்தான் அந்தத் தோட்டம் இருக்கிறது. நான் அந்த இடத்தில் தடுப்பணை கேட்கவில்லை. ஏற்கெனவே ஆஞ்சநேயர்மலை என்ற பகுதியில், வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்டிருந்த அந்தத் தடுப்பணைதான் பாழடைந்துபோய், அதிலே தண்ணீர் இல்லாத நிலை இருக்கிறதே தவிர, வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடத்தில் நான் கேட்கவில்லை. ஆகவே, அந்த இடத்தில் நீங்கள் கட்டிக்கொடுத்தால்,*

[2018 ஜூன் 7

காட்டில் இருக்கக்கூடிய மான்கள், காட்டுப் பன்றிகள் உள்ளிட்ட வன விலங்குகள் தண்ணீர் குடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். அந்தப் பகுதியிலே நிலத்தடி நீரில் கலந்திருக்கக்கூடிய fluoride குறைவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவேதான் நான் வருவாய்த் துறையிடத்தில் கேட்கவில்லை. நான் ஒகேனக்கல்லுக்கும் போகவில்லை, தருமபுரிக்கும் போகவில்லை. வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ஏற்கெனவே கட்டப்பட்டிருந்த தடுப்பணை பாழடைந்துபோய் இருக்கிறது. ஆகவே, தயவு செய்து அந்தத் தடுப்பணையைத்தான் கட்டிக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தத் தடுப்பணை எந்த இடத்தில் கட்டப்பட்டு இருக்கிறது? அந்தத் தடுப்பணை பாதிக்கப்பட்ட விவரம் ஆகியவை குறித்து ஒரு குறிப்பை தனியாகக் கொடுத்தால், அதுகுறித்து விவரம் சேகரித்து சரிசெய்யப்படும். இது ஒன்று. இரண்டாவதாக* underline *செய்துகொள்ள வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஒசூர் வனக் கோட்டத்தில் 2017-2018 ஆம் ஆண்டில், நடப்பாண்டில் 15 இலட்சம் ரூபாய் செலவில் 3 பண்ணைக் குட்டைகளும், 6 இலட்சம் ரூபாய் செலவில் 2 தடுப்பணைகளும் மற்றும் 24 இலட்சம் ரூபாய் செலவில் யானை, சிங்கம் போன்ற வன விலங்குகள் தண்ணீர் குடிக்க 5 நீர்த் துளைகளும்*-water holes *அமைக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.*

திரு. பி. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணகிரி ஒன்றியம் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி நேரத்தில் அமைதியாக இருந்தால் கேள்வி கேட்பதற்கும், அமைச்சர் பதில் சொல்வதற்கும் சரியாக இருக்கும். கொஞ்சம்*

2018 ஜூன் 7]

அமைதி காக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

முற்பகல் 10-10

திரு. பி. முருகன்: *கிருஷ்ணகிரி ஒன்றியம், நாரணப்பள்ளி ஊராட்சி, ஏக்கல்நத்தம் வனத் துறைக்குச் சொந்தமான மலை கிராமத்திற்கு சாலை வசதி இல்லை. சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் காட்டுப் பாதையில் நடந்து சென்று வருகின்றனர். அங்கே 200 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். கிராமப் பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள், நோயாளிகள் காட்டுப்பாதையிலே நடந்து செல்வதால் பாதிக்கப்படுகிறார்கள். பொது மக்கள் உடல்நலம் குன்றிப்போனால் அவர்களை தூளியிலே கட்டித்தான் எடுத்துச் சென்று வருகிறார்கள். ரேஷன் பொருட்கள் கழுதையின் மூலமாகத்தான் அந்தக் கிராமத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆகவே, இச்சாலை வனத் துறை மூலமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு* proposal *கூட அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து உடனடியாகத் தலையிட்டு பொது மக்களின் நலன் கருதி சாலை அமைத்துத் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, யானைகள் நடமாட்டம் ஒரு மாதமாக அங்கே இருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். உங்களுக்கு ஒரு கேள்விதான் கேட்க அனுமதி. மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற இந்தக் கேள்வி, சொல்கின்ற கருத்து, மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாத ஒன்று. தடுப்பணை சம்பந்தப்பட்ட கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்குட்டுவன் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இவர் அந்தப் பகுதி என்பதால் கூடுதலாகச் சாலை கேட்கிறார்கள். ஏற்கெனவே நேற்றையதினம், நேற்றைக்கு முன்தினம் எல்லாம் சாலைகள் பற்றிய விளக்கங்களை தெளிவாகக் கூறியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய நிதியை ஒதுக்கீடு செய்ய தனியாகக் கருத்துரு பெற்று ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர் சொல்வதுபோன்று, கழுதைகள் மூலமாகக் கொண்டு செல்கின்ற*

இடம் அல்லது நடக்க முடியாத சூழ்நிலைகள் எதுவாக இருந்தாலும், அவற்றைச் சரிசெய்வதற்கு, நிதியாதாரத்தைப் பொறுத்து பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், நீங்கள் என் அறைக்கு வந்து, எனக்கு வாய்ப்பே தரவில்லை என்று சொன்னீர்கள். உங்களுக்கு கேள்வி நேரத்தில் ஒரு மூலக் கேள்வி அனுமதித்திருக்கிறேன். 5 துணை வினாக்கள் அனுமதித்திருக்கிறேன். இப்போது ஆறாவதாக வாய்ப்புக் கொடுக்கிறேன். ஆனால், நீங்கள் எனக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை, கொடுக்கவில்லை என்று சொல்கிறீர்கள். இப்படி நீங்கள் என்னைக் கேட்டால் நான் என்ன செய்வது? அனைத்து விவரங்களும் என்னிடம் இருக்கின்றன. கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் பெருந்தன்மைக்கு மிக்க நன்றி. வன விலங்குகளின் குடிநீருக்காக அணைகள் கட்டப்படுகின்றன. அதேநேரத்திலே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலே வடகரை, புலியோடைக்காடு, சீவலங்காடு போன்ற பகுதிகளில், கடந்த 75 நாட்களாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருவதால், தென்னை, பலா, வாழை, மா போன்ற மரங்கள் சேதமடைந்து, அங்கே விவசாயிகள் வேதனை அடைந்துள்ளார்கள். வனத் துறையினுடைய குழு அமைத்தும் செயல்படாத காரணத்தால், யானைகள் அட்டகாசம் செய்வதுடன், காட்டிற்குள் செல்ல அவை மறுக்கின்றன. உரிய நடவடிக்கை எடுத்து, அங்குள்ள விவசாயிகளுடைய துயரைத் துடைக்க இந்த அரசு முன்வருமா என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல, யானைகள் மற்றும் விலங்குகள் பிரச்சினை இப்போது இல்லை. தமிழ்நாட்டில் அது குறைந்துவிட்டது. ஏனென்றால், மழை பெய்யாத காலத்தில், வறட்சிக் காலத்தில் மிருகங்கள், வன விலங்குகள் மேலேயிருந்து கீழே இறங்கி பயிர்களை நாசம்*

2018 ஜூன் 7]

செய்த வரலாறு உண்மை. ஆனால், கடந்த 3 மாதங்களாக தென்மேற்குப் பருவமழை சரியாகப் பெய்வதால், அவர்கள் குறிப்பிடுகின்ற மேற்குத் தொடர்ச்சி மலையில் அருமையான மழை பெய்திருப்பதால், அதுபோன்ற ஒரு நிலை இல்லை. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்தச் செய்திகளை அவர் தனியாக எழுதிக் கொடுத்தால், வனத் துறை மூலமாகப் பரிசீலிக்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

142—

புதிய பாடப் பிரிவு

***27500—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளி பாடத் திட்டத்தில் ஜவுளி மேலாண்மையை புதிய பாடப் பிரிவாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மேல்நிலைக் கல்விப் பாடத் திட்டத்தில், தொழிற்கல்விப் பிரிவில் துணிகளும்-ஆடை வடிவமைப்பும் மற்றும் ஆடை தொழில்நுட்பம் போன்ற பாடங்களில் ஜவுளி மேலாண்மை குறித்த கருத்துகள் மாணவர்களுக்கு ஏற்கெனவே பாடமாக கற்றுத் தரப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.*

திரு. எ.பி. சக்திவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர் சமுதாயத்திற்கு நாள்தோறும் நலத்*